பத்தி

தண்ணிப் பீலிக் காரர்

ஏறக்குறைய பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை மலாயா மக்கள் முழுக்க முழுக்க ஆறு, ஓடை, கிணறு, மழை போன்ற நீர் ஆதாரங்களையே,தங்களின் அன்றாடத் தண்ணீர்ப் பயனீட்டுக்குப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான், ஆங்கிலேய அரசு தண்ணீர்க் குழாய்த் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கின்றது.

ஒரு காலத்தில் சிலாங்கூர் மாநிலத்தின் அரச நகரமாக விளங்கியது கிள்ளான் நகரம். கிள்ளான் ஆற்றின் தென் கரையில் ஆயுத எழுத்துப் போன்று அமைந்துள்ள மூன்று குன்றுகளுக்கிடையில் அமைந்து கிடக்கின்றது இந்நகரம். இந்தியர், சீனர் வருகைக்குப் பிறகே கிள்ளான் நகரம் வளரத்தொடக்கியது என்பதும் உண்மை.

சுல்தான் , அரண்மனை, அரசு அலுவலகங்கள், காவல் நிலையம், நீதிமன்றம், அஞ்சலகம், மருத்துவமனை, புகைவண்டி நிலையம் ஆகிய அனைத்தும் இந்த வட்டத்துள்ளேயே அமைந்துள்ளன.

'குட்டி இந்தியா' என்று பேசப்படும் ஜாலான் துங்கு கிளானா, அன்று 'ரம்பாவ் ஸ்ட்ரீட்' என்றே அழைக்கப்பட்டது. ஜாலான் சுல்தான் என்பது தமிழர்களால் 'செட்டித் தெரு' என்று அழைக்கப்பட்டது. வங்கிகள் இல்லாத அக்கால கட்டத்தில் இந்தச் செட்டித் தெருதான் வங்கியாக விளங்கிற்று.

ஜாலான் டத்தோ அம்சா என்பது 'துங்கு டியாவுடின்' என்று பெயர் பெற்றிருந்தது. இத்தெருவின் கிழக்குக் கோடியில் அஞ்சலகத்துக்கு எதிரில்தான் சொந்தக் கப்பல் வைத்து வாணிகம் வளர்த்த புகழ்பெற்ற தமிழ் முஸ்லிம் வர்த்தகரின் 'ஆர்.இ. முகமாட் கம்பெனி' முக்கோண வடிவில் கம்பீரமாக நின்றிருந்தது.

கிள்ளான் நகரில் அக்காலக் கட்டத்தில் சில செல்வச் சீமான்களும் அரசு அதிகாரிகளுமே மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்தினர். சாமானியர்களுக்கு அவை எட்டாக் கனியாகவே இருந்தன.

பொதுமக்களின் போக்குவரத்துக்குப் புகைவண்டியே உதவியாய் இருந்தது. நகருக்குள் ஓரிடத்தில் இருந்து பிறிதோர் இடத்திற்குச் செல்ல 'பேச்சாக்காடி' என்ற ஒரு வகை இழுவை வண்டி இருந்தது. இதுவும் சீமான்களுக்கே பயன்பட்டது.

இரண்டு பேர் அமரக்கூடிய ஓர் இருக்கையும் உயரமான இரு சக்கரங்களும் கொண்டு அமைந்தது இந்த வண்டி. இரண்டு கைகளாலும் பிடித்து இழுத்துச் செல்வதற்குத் தோதாக முன்பக்கம் இரண்டு நீண்ட மரச்சட்டங்கள் இணைக்கப்பட்டிருக்கும்.

செருப்பில்லாத பாதங்கள்-கணுக்காலுக்கு மேல் நிற்கின்ற சீனத்துப் பாணியிலான கருநிறக் காற்சட்டை- நெஞ்சுப் பக்கம் திறந்தே கிடக்கும் மேல் சட்டை- தலையில் அகன்ற ஓலைக் குல்லா- இந்தக் கோலத்தில் பயணிகளை ஏற்றிக் கொண்டு ஒட்டிய வயிற்றுடன் டொக்..டொக்.டொக் என்று வண்டியை இழுத்துக் கொண்டு ஓடுகின்ற அப்பாட்டாளியைப் பார்க்கும்போது மிகப் பரிதாபமாய் இருக்கும்.

செல்லும் தூரத்துக்கு ஏற்றவாறு இவர்கள் கூலியாகப் பெற்றுக் கொள்வது சில ஒற்றைக் காசுகளே! இப்பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் பெரும்பாலும் சீனர்களே.

இன்றைய கிள்ளான் புகைவண்டி நிலையம். அன்றே அமைக்கப்பட்ட ஒன்று. அக்கால கட்டத்தில் பேருந்துகளோ வாடகை வண்டிகளோ கிடையா.

கோலாலம்பூர், கோலாசிலாங்கூர், பினாங்கு, சிரம்பான், சிங்கப்பூர் போன்ற இடங்களுக்குச் செல்ல பொதுமக்களுக்குக் கிடைத்திருந்த ஒரே வாகன வசதி புகைவண்டி மட்டுமே.

கிள்ளான் புகைவண்டி நிலையத்துக்கு முன்புறம்தான் தோட்டத் தொழிலாளர்களின் காவலனாக விளங்கிய 'சஞ்சித் துரை' அலுவலகம் இருந்தது. இங்கே சாலை, முச்சந்தியாக அமைந்திருக்கின்றது. எப்பொழுதும் சன சந்தடி நிறைந்துள்ள இடம்.

பொதுமக்களின் நலன் கருதி முதன்முதலாய் இங்கே ஒரு பொதுநீர்க்குழாய் அமைத்துக் கொடுத்ததாம் கிள்ளான் மராமத்து இலாகா.

குழாயில் இருந்து தண்ணீர் கொட்டுவது அக்கால மக்களுக்கு ஒரு புதுமையாக இருந்தது. குழாய் நீரைக் குடிப்பதிலும் அந்நீரில் குளிப்பதிலும் அதிக ஆர்வம் காட்டினர் பொதுமக்கள்.

இந்த நீர்க்குழாயை, அக்காலத் தமிழர்கள் 'தண்ணிப் பீலி' என்றே அழைத்தனர். குழாய் நீர் இலவசம் என்ற காரணத்தால் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும்.

குளிக்கின்றவர்கள் குடி நீருக்காக வருபவர்களுக்குச் சதா இடைஞ்சலாகவே இருந்தனர். எனவே, குளிப்பதற்குத் தலா 'ஒரு காசு' கட்டணம் விதித்தது அரசு. இக்கட்டணத்தை வசூலிப்பதற்கு ஒரு காவலாளியையும் அங்கே உட்கார வைத்து விட்டது அரசாங்கம்.

அப்படி முதன் முதலாக அங்கே கட்டணம் வசூலிப்பதற்காகப் பொது மராமத்து ஊழியரான அடைக்கன் என்பவர் அமர்த்தப்பட்டார்.

கட்டணம் விதித்தவுடன் கூட்டம் கொஞ்சம் குறையத்தான் செய்தது என்றாலும் உள்ளூர்ச் சீனர்கள் அங்கே மிகுதியாகக் குளித்துக் கொண்டுதான் இருந்தனர்.

தண்ணிப் பீலிக்குக் காவல் இருந்த காரணத்தால் அடைக்கன் அவர்கள் நாளடைவில் 'தண்ணிப்பீலிக்காரர்' ஆகிவிட்டார். அப்பெயர் அவரின் பரம்பரைக்கு இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

எங்கிருந்தோ புதிதாகக் குடியேறிய சீன இளைஞன் ஒருவன் அங்கே குளிக்க வந்தான். தண்ணிப் பீலிக்காரர் வழக்கம்போல் கட்டணம் கேட்டிருக்கிறார். "காசு வாங்குற விசயம் எனக்குத் தெரியாது. நாளைக்குத் தந்துடுறேன்" என்று சொல்லிக் குளித்துவிட்டுப் போய் விட்டான்.

மறுநாளும் வந்து, "காசு கொண்டு வர மறந்துட்டேன். நாளைக்குச் சேர்த்துத் தந்திடுறேன்" என்று சொல்லி குளித்துவிட்டுப் போனான்.

மூன்றாவது நாளும் வந்து பழைய பல்லவியே பாடி இருக்கிறான் சீனன். தண்ணிப் பீலிக்காரர் தகராறு பண்ணியிருக்கிறார்.

" நான் யாரு தெரியுமா? சாக்குல கட்டி ஆத்துல போட்டுட்டுப் போயிடுவேன். ரொம்பத் துள்ளாத" என்று மிரட்டிட்டு, குளித்துவிட்டும் போய்விட்டான் அவன்.

இதைப் பார்த்திருந்த சீன நண்பர்கள் வந்து "அடைக்கன்! அந்தப் பய ரொம்பப் பொல்லாதவன். தொலைஞ்சு போகட்டும். அவன்கிட்ட வம்புக்குப் போகாதே" என்று எச்சரிக்கை செய்தார்களாம்.

நான்காவது நாளும் வந்துவிட்டான் அவன். தூரத்தில் வரும்போதே முன்னெச்சரிக்கையாகத் தண்ணிப் பீலியைப் பூட்டி வைத்து விட்டாராம் அடைக்கன்.

குழாயைத் திறந்து விடச் சொல்லி மிரட்டியிருக்கிறான் அந்தச் சீனன்.

"மூணு நாளு பாக்கி மூணு காசும் இன்னைக்கிக் காசும் ஆக நாலு காசையும் இங்கே வச்சாத்தான் திறப்பேன்" என்று கொஞ்சமும் அஞ்சாமல் பேசினார் தண்ணிப் பீலிக்காரர்.

"தும்" என்று ஒரு குத்து விட்டானாம் சீனன். தண்ணிப் பீலிக்காரர் மூக்கில் இருந்து கொட கொட வென்று இரத்தம் கொட்டிருச்சாம். தடுமாறிப் போனாராம் அவர்.

சீனத்தில் கெட்ட வார்த்தை சொல்லி ஏசியவாறு அங்கே கிடந்த ஒரு கல்லை எடுத்துக் கொண்டு பூட்டை உடைக்க முயன்றான் சீனன்.

அவ்வளவுதான்!

தலைத்துண்டை எடுத்து, விர்ரென்று சுற்றிக் கயிறாக்கிக் கொண்ட அடைக்கன் அம்பெனப் பாய்ந்து மின்னல் வேகத்தில் சீனனின் கழுத்தில் போட்டு, கர கர வென்று முறுக்கி இறுக்கிக் கொண்டார்.

இப்படி ஒரு தாக்குதலைச் சற்றும் எதிர்பாராத அச்சீனன் அலமந்து போனான். கண்கள் பிதுங்க மயங்கி அப்படியே சாய்ந்து விட்டான்.

பார்த்திருந்த பலர் உதவிக்கு வந்தனர். யாரோ காவல்துறைக்குத் தகவல் கொடுத்திருக்க வேண்டும். கண நேரத்தில் காவல்துறை வண்டி அங்கே வந்து நின்றது.

"தேடிக்கொண்டிருந்த பிரபல குண்டர் தலைவன் பிடிபட்டான்" என்ற மகிழ்ச்சியில் அவனை அள்ளிப் போட்டுக் கொண்டு மருத்துவமனையை நோக்கி விரைந்தது காவல் துறை வண்டி.

"சாது மிரண்டால் காடு கொள்ளாதுங்கிற மாதிரி. இந்தத் தண்ணிப் பீலிக் காரருக்குத் தான் எம்புட்டுத் துணிச்சல்!" பார்த்து நின்ற கூட்டம் மூக்கின் மேல் விரல் வைத்தது.

இக்கதைக்குச் சொந்தக்காரரான தண்ணிப் பீலிக்காரருக்கு இன்றைய வயது நூற்று இருபத்தேழு!

அ. ரெங்கசாமி , கோலாலங்காட்